DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -3

| | | |
|---|---|---|
| Name | : திரு. அமிர்தலிங்கம் | Caste: |
| Father's Name: | திரு. காசிநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of January -2024.

**A1 , A2, A5, A7 to A9, A11, A13 to A18 present. A3 produced. A6 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் வங்குடி கிராமத்தில், காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து தற்சமயம் தேசிங்குபாலன் என்பவர் கொலை வழக்கு சம்மந்தமாக 10 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டு சிவகங்கை மாவட்டம் புரசடைஉடைப்பு திறந்த சிறைசாலையில் தண்டனை அனுபவித்து வருகிறேன். இறந்துபோன காசிநாதன் எனது தகப்பனார். இறந்துபோன பிரபு எனது சித்தப்பா பாரிவள்ளல் என்பவரது மகன். இறந்துபோன சுரேஷ் எனது பெரியப்பா சூரியமூர்த்தி என்பவரது மகன். இறந்துபோன தர்மலிங்கம் மற்றும் மகாலிங்கம் ஆகியோர் எனது உடன்பிறந்த சகோதரர்கள்.

ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரில் நீண்ட நாட்களாக ஒரு காளியம்மன் கோவில் இருந்து வருகிறது. எங்கள் ஊரில் மேல்பாதி, கீழ்பாதி, நடுபாதி மற்றும் உறவு முறை என்று மக்கள் நான்கு பிரிவுகளாக வசிக்கிறார்கள். அந்த காளியம்மன்

கோவிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்யலாம் என்று எங்கள் ஊரில் ஒரு ஊர் கூட்டம் நடைபெற்றது. அப்போது எனக்கு 19 வயது இருக்கும். அந்த கூட்டத்தில் நடுபகுதியை சேர்ந்த மக்கள் மட்டும் எந்த முடிவிற்கும் கட்டுபடாமல் எந்த முடிவும் எடுக்கமுடியாமல் தடுத்துவந்தார்கள். எனவே மற்ற 3 பகுதியை சேர்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து கோவிலை புதுபித்து கும்பாபிஷேகம் செய்துவிட்டார்கள்.

நடுபகுதியை சேர்ந்த மக்கள் அவர்கள் பகுதியில் அமைந்திருந்த முருகன் கோவிலை புதுபித்து கும்பாபிஷேகம் செய்துவிட்டார்கள். அந்த சமயத்தில் எங்கள் கிராமத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெற்றது. அதில் 1 ஆம் எதிரி போட்டியிட்டார். நடுபகுதி தரப்பில் அவர் போட்டியிட்டார். மற்ற 3 பகுதிகள் தரப்பில் மச்சகேந்திரன் என்பவரை நிறுத்தினார்கள். அந்த தேர்தலில் 12 வாக்குகள் வித்தியாசத்தில் மச்சகேந்திரன் தோற்றுவிட்டார். ரவிசந்திரன் 300 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்றுவிட்டார். தேவரசன் என்பவர் வெற்றிபெற்றுவிட்டார்.

எனவே எதிர்காலத்தில் தேர்தலில் வெற்றிபெறவேண்டுமானால் நடுபகுதியை சேர்ந்தவர்கள் மற்ற 3 பகுதிகளை சேர்ந்தவர்களுடன் சேர்ந்துவிடவேண்டுமென்று தீர்மானித்து 13 ஆம் எதிரி பாரதிதாசன் என்பவர் தலைமையில் நடுபகுதியை சேர்ந்தவர்கள் மற்ற பகுதியை சேர்ந்தவர்களுடன் பஞ்சாயத்து பேசினார்கள். அந்த பஞ்சாயத்தில் நடுபகுதியை சேர்ந்தவர்களை மற்ற 3 பகுதியை சேர்ந்தவர்களுடன் சேர்த்துவிட்டார்கள். அவர்கள் ஊரில் சேர்ந்துவிட்டால் பிரச்சனை ஏற்படும் என்பதால் எங்கள் குடும்பம் மட்டும் ஊர்பிரச்சனைகளிலிருந்து ஒதுங்கிகொண்டோம்.

நான் மேலே சொன்ன தேர்தலில் எங்கள் குடும்பத்தினர் மச்சகேந்திரன் ஆதரித்தோம். அதன் காரணமாக எதிரி ரவிசந்திரன் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் எங்கள் குடும்பத்தினர் மீது விரோதம் கொண்டிருந்தார்கள். தேசிங்கு பாலன் என்பவருக்கு பாரதிதாசன், திருஞானம் ஆகியோர் மாமா முறை ஆகவேண்டும். எதிரிகள் உறவினராகவும், பெண்கொடுத்து எடுத்திருப்பதாலும் அவர்கள் நெறுக்கமாகவும் இருக்கிறார்கள். எனவே எங்கள் குடும்பத்தினர் மீது எதிரிகள் விரோதம் கொண்டிருந்தார்கள்.

எங்கள் குடும்பம் பொருளாதார ரீதியாக வசதியாக இருந்ததால் எங்கள் குடும்பத்தை கட்டுபடுத்திவிட்டால் ஊரை தங்களது கட்டுபாட்டில் கொண்டுவந்துவிடலாம் என்று எதிரிகள் கணக்கு போட்டார்கள். அதனாலும் அவர்களுக்கு எங்கள்மீது விரோதம் இருந்தது.

எங்கள் ஊரை சேர்ந்த ஜோதிவேல் என்பவர் எங்களது குடும்பத்துடன் நெருக்கமாக இருந்தார். எனவே அவரிடம் தேசிங்கு பாலன் என்பவர் எங்கள் குடும்பத்தையே கூண்டோடு அழிக்கபோவதாகவும், எதற்காக ஜோதிவேல் எங்கள் குடும்பத்துடன் நெருக்கமாக இருக்கிறார் என்றும் கேட்டிருக்கிறார். அந்த சங்கதியை நான் என் தகப்பனாரிடம் தெரியபடுத்தினேன். என் தகப்பனார் தேசிங்கு பாலனின் தகப்பனாரான சுந்தரேசன் என்பவரிடம் முறையிட்டார். சுந்தரேசன் தனது மகன் அப்படியெல்லாம் சொல்லமாட்டான் என்று சொல்லி என் தகப்பனாரை தரகுறைவாக பேசி சண்டைக்கு வந்துவிட்டார்.

எங்களது வயலின் வழியாகத்தான் தேசிங்குபாலன் குடும்பத்தினர் அவர்களது வயலுக்கு போகவேண்டும். மேற்படி பிரச்சனையின் காரணமாக என் தகப்பனார் சுந்தரேசனிடம் அவரது குடும்பத்தினர் எங்களது வயல் வழியாக போககூடாது என்றும், வேறு வழியாக போய்கொள்ளுங்கள் என்றும் சொல்லிவிட்டார்.

அது தொடர்பாக ஒரு நாள் தேசிங்குபாலன் எங்களது குடும்பத்தினருடன் தகராறு செய்தார். நாங்கள் அது சம்மந்தமாக புகார் கொடுப்பதற்காக புறப்பட்டு சென்றபோது ரவிசந்திரன், திருஞானம், தினேஷ், தேசிங்குபாலன் ஆகியோர் என்னையும், என் தகப்பானரையும், சகோதரர்களையும், தம்பி பிரபுவையும் தாக்கினார்கள் அதில் எங்களுக்கு ரத்தகாயங்கள் ஏற்பட்டது. நாங்கள் நேரடியாக காவல்நிலையத்திற்கு சென்றோம்.

போலிசார் எங்களை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் தேசிங்குபாலன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். மறுநான் அந்த வழக்கு சம்மந்தமாக எங்களை கைது செய்துவிட்டார்கள். நாங்கள் பிணையில் வெளியில் வந்தோம்.

அதன்பின்னிட்டு பாரதிதாசன் மற்றும் ரவிசந்திரன் தலைமையில் எதிரிகள் அனைவரும் அடிக்கடி ஒன்றுகூடி பேசி தேசிங்குபாலன் இறப்பிற்கு பழிவாங்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அக்கம் பக்கத்தினர் அதுசம்மந்தமாக எங்களிடம் தெரியபடுத்தினார்கள். எனது உறவினரான சரோஜா, பக்கத்தில் வசிக்கும் அலெக்சாண்டர், ரகுபதி ஆகியோர் அது சம்மந்தமாக எங்களிடம் சொன்னார்கள்.

இது சம்மந்தமாக நாங்கள் மீன்சுருட்டி காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த 16.05.2008 அன்று பைப்பில் தண்ணீர் வராதகாரணத்தினால் நான், எனது அண்ணன் ராஜலிங்கம், தம்பி மகாலிங்கம், சித்தப்பா மகன் பிரபு, பெரியப்பா மகன் சுரேஷ் ஆகியோர் எங்கள் ஊரிலுள்ள வண்ணாங்குளத்திற்கு குளிப்பதற்காக சென்றோம். நாங்கள் குளித்துவிட்டு வீட்டிற்கு காலை 9.30 மணி முதல் 10.00 மணிக்குள்ளாக திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

வங்குடி கிழக்கு தெருவிலுள்ள பாலுசாமி என்பவரது வீட்டிற்கு முன்பிருந்து எதிரிகள் ஜவகர்பாபு, பாஸ்கரன், விஜய், ஸ்ரீதர், சுரேஷ், காளிதாசன், திருவாளப்புத்தூர் ரமேஷ், சிலம்பரசன், ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, தினேஷ், சசிகலா, கனகவள்ளி ஆகியோர் எங்களை நோக்கி ஆயுதங்களுடன் ஓடிவந்தார்கள். அவர்கள் வீச்சருவாள், கத்தி போன்ற ஆயுதங்களை வைத்திருந்தார்கள். எதிரிகள் சசிகலா, கனகவள்ளி, ரவிசந்திரன் ஆகியோர் இவர்கள் யாரையும் ஒருவரைகூட உயிரோடு விடாதீர்கள் என்று சொன்னார்கள்.

எதிரி ரவிசந்திரன் எனது தம்பி சுரேசை வீச்சருவாளால் கால், கழுத்து, கன்னம், இடது கை ஆகிய இடங்களில் வெட்டினார். தடுமாறிய சுரேசை எதிரி திருஞானம் பட்டாகத்தியால் கழுத்தில் வெட்டினார். சுரேஷ் கீழே விழுந்துவிட்டார். ( சாட்சி ஆஜர் எதிரிகள் அனைவரையும் சரியாக அடையாளம் காட்டுகிறார்.)

அதே சமயத்தில் எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பிரபுவை வெட்டினார்கள். கை, கால், விலாவின் பின்புறம் ஆகிய இடங்களில் எதிரி பழனிசாமி வெட்டினார்.

தடுமாறிய பிரபுவை எதிரி பிரபாகரன் பட்டாகத்தியால் விலாபகுதியில் குத்திவிட்டார். அப்போது கிழே விழந்த பிரபுவை எதிரி பழனிசாமி பட்டாகத்தியால் கழுத்தில் வெட்டி தலையை துண்டாக எடுத்துவிட்டார்.

எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை காலால் உதைத்து ரோட்டில் தள்ளினார். நான், எனது தம்பி மகாலிங்கம், அண்ணன் ராஜலிங்கம் ஆகியோர் வீட்டுபக்கமாக ஓடினோம். சத்தம் கேட்டு என் தகப்பனார், அண்ணன் தர்மலிங்கம், அம்மா ஜானகி, அண்ணி ஜெயந்தி ஆகியோர் எங்களை நோக்கி ஓடிவந்தார்கள். எங்களை எதிரிகள் பின்தொடர்ந்து விரட்டி வந்தார்கள்.

எதிரி தினேஷ் என் தம்பி மகாலிங்கத்தை கால், கை, கழுத்து ஆகிய இடங்களில் வெட்டிவிட்டார். எதிரி ராஜதுரையும் மகாலிங்கத்தின் கழுத்தில் வெட்டினார். மகாலிங்கம் கிழே விழுந்துவிட்டார். அப்போது என் தகப்பனார் என் பிள்ளைகளில் யாரையாவது ஒருவரையாவது விட்டுவிடுங்கள் என்று சொல்லிகொண்டே ஓடிவந்தார். என் தகப்பனாரை திருவாளப்புத்தூர் ரமேசும், சிலம்பரசனும் வெட்டினார்கள். எதிரி சிலம்பரசன் என் தகப்பனாரின் கால், கை, விலாபகுதி, வயிறு ஆகிய இடங்களில் வெட்டினார். திருவாளப்புத்தூர் ரமேஷ் என் தகப்பனாரின் வயிறு, முன்விலாபகுதி ஆகிய இடங்களில் வெட்டினார்.

என் அண்ணன் தர்மலிங்கத்தை எதிரிகள் ஜவகர்பாபு, சுரேஷ், விஜய், ஸ்ரீதர், காளிதாசன், ரமேஷ் த.பெ.சக்திவேல், பாஸ்கரன் ஆகியோர் சுற்றிவளைத்து எதிரி காளிதாசன் என் அண்ணனை உதைத்து தள்ளினார். அப்போது எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் காலில் வெட்டினார். எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் தர்மலிங்கத்தின் கழுத்து பகுதி, கால், விலாபகுதி ஆகிய இடங்களில் வெட்டினார். தடுமாறி கீழே விழுந்த தர்மலிங்கத்தின் மார்பில் எதிரி காளிதாசன் உட்கார்ந்துகொண்டார்.

எதிரிகள் விஜய், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சுரேஷ் ஆகியோர் என் அண்ணனை பிடித்துகொண்டார்கள். அப்போது சக்திவேல் மகன் ரமேஷ் என்பவர் பட்டா கத்தியால் என் அண்ணனின் கழுத்தில் வெட்டி தலையை துண்டித்துவிட்டார். அப்போது என்

தாயார் என் மூத்த மகனை விட்டுவிடுங்கள் என்று சொல்லிகொண்டு ஓடிவந்தவரை எதிரி காளிதாசன் எட்டிஉதைத்தார். என் அம்மா கீழே விழுந்துவிட்டார். கீழே விழந்த என் அம்மாவை எதிரி காளிதாசன் தலையில் பட்டாகத்தியால் வெட்டினார். எதிரி சிலம்பரசன் என் அம்மாவின் கால், கை பகுதிகளில் வெட்டினார். எதிரி தினேஷ் என் அம்மாவின் வயிற்றில் வெட்டினார்.

எதிரி தினேஷ் என் அம்மாவின் பிறப்பு உறுப்பில் காலை வைத்து இத்தோடு உன் வம்சம் அழிந்துவிட்டது என்று சொன்னார். எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் தர்மலிங்கத்தின் தலையை எடுத்துக்கொண்டு காளியம்மன் கோவிலுக்கு வந்தார். அதை பார்த்துவிட்டு நாம் தப்பித்தால்போதும் என்று நானும், ராஜலிங்கமும் தெற்கு பார்க்க ஓடிவிட்டோம். சுமார் 2 மணிநேரம் கழித்து போலிஸ்வாகனம் வரும் சைரன் சத்தம் கேட்டது. அதனை கேட்டுவிட்டு நான் சற்று ஆசுவாசம் அடைந்து வீட்டை நோக்கி வந்தேன். அங்கு போலிசார் நிறையபேர் இருந்தார்கள். என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

என் தாயார் உடலில் மட்டும் சற்று அசைவு இருந்தது. மற்ற 5 பேரும் இறந்துவிட்டார்கள். என் தாயாரை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அந்த இடத்தில் என் அண்ணன் ராஜலிங்கமும், அண்ணி ஜெயந்தியும் இருந்தார்கள்.

**6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10 வகுப்பு படித்திருக்கிறேன். நான் விவசாயம் செய்து வந்தேன். சம்பவம் நடந்த சமயத்தில் நான் ஒரு துணிகடைக்கு வேலைக்கு சென்றுவந்தேனா என்றால் இல்லை. கடலூர் சுமங்கலி டெக்ஸ்டைல்ஸ் என்ற கடையில் நான் வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் 4 பகுதிகள் இருப்பதையும், கோவில் பிரச்சனை சம்மந்தமாகவும், தேர்தல்சம்மந்தமாகவும், நிலபிரச்சனை சம்மந்தமாகவும் எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்ததையும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளையும் போலிசார்

விசாரணையில் சொல்லியிருக்கிறேன். தேசிங்குபாலன் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் எங்களை தாக்கியது சம்மந்தமாக நாங்கள் புகார் கொடுத்தோம். அந்த புகாரில் உண்மையில்லை என்று சொல்லி போலிசார் முடித்துவிட்டார்கள்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் மேல்பகுதி, கீழ்பகுதி, நடுபகுதி மற்றும் உறவுமுறை ஆகிய நான்கு பகுதிகளிலிருந்து யார்யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் எங்களை அழிப்பதற்காக சதிதிட்டம் தீட்டினார்கள் என்று சொல்லி நான் கொடுத்ததாக சொல்லும் புகாரின் நகலை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் அதன் நகல் எங்களிடம் இல்லை. அசலை போலிசார்வசம் கொடுத்துவிட்டோம்.

சம்பவ சமயத்தில் எனது அண்ணன் ராஜலிங்கம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தினங்கள் மட்டுமே அவர் கல்லூரிக்கு போவார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். பைப்பில் தண்ணீர் வராதகாரணத்தினால் தான் சம்பவம் நடந்த தினத்தன்று வண்ணாங்குளத்திற்கு குளிக்க போனோம் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை.

சம்பவதினத்தன்று நான் வயலுக்கு போகவில்லை. அன்று காலை 9.00 மணிக்கு தான் நானும், எனது சகோதரர்களும் குளிப்பதற்காக வண்ணாங்குளத்திற்கு போனோம். எதிரிகள் எங்களை தாக்க வந்தபோது கீழே கிடந்த கல் போன்றவற்றை எடுத்து எதிரிகளை திரும்ப தாக்குவதற்கு நாங்கள் முயற்சித்தோமா என்றால் அந்த இடத்தில் எந்த ஆயுதங்களும் இல்லை. எதிரிகளை தடுக்காமல் நான் அந்த இடத்திலிருந்து தப்பித்து செல்வதற்கு தான் முயற்சித்தேனா என்றால் எதிரிகள் அனைவரும் கைகளில் ஆயுதங்களை வைத்திருந்த காரணத்தினால் நான் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டேன்.

சம்பவதினத்தன்று நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் துணிகடைக்கு வேலைக்கு போய்விட்டேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எதிரிகளை தடுத்திருப்பேன் என்றாலும், எனக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. என் அண்ணன் ராஜலிங்கத்தை போலிசார்

தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரச்சொன்னார்கள் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் ராஜலிங்கம் மட்டும் தான் படித்தவர் என்பதால் அவரை வைத்து பொய்யான புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

எங்கள் குடும்பத்திற்கு அரசியல்ரீதியாகவும், கோவில்பிரச்சனை காரணமாகவும் நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றாலும், வேறு யாரோ தான் மேற்படி கொலைகளை செய்துவிட்டார்கள் என்றும், எதிரிகள் மீது முன்விரோதம் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. 6 ஆம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அவருக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவ தினத்தன்று காலை நேரத்தில் நான் என் சகோதரர்களுடன் சேர்ந்து வண்ணாங்குளத்திற்கு சென்று குளித்துவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். புகாரில் நானும் வண்ணாங்குளத்திற்கு சென்று குளித்துவிட்டு வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி மாற்றி புகாரில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொல்லுகிறார்.

சம்பவதினத்தன்று நான் ஊரிலேயே இல்லை என்றாலும், எனது உறவினர்கள் இறந்துவிட்டதாக கேள்விபட்டுதான் நான் ஊருக்கே வந்தேன் என்றாலும் சரியல்ல. எதிரி பாஸ்கரன் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து தர்மலிங்கத்தை சுற்றிவளைத்துவெட்டினார் என்று தற்போது தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றாலும், போலிசார் விசாரணையில் அதுபோன்று நான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் காலில் வெட்டியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி பாஸ்கரனுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. எதிரி பாஸ்கரனுக்கும், எங்கள் குடும்பத்தினருக்கும் அரசியல்ரீதியாக விரோதம் இருந்த காரணத்தினால் அவரது பெயரிலும் பொய்யாக புகார்

கொடுத்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல.

**13 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்களது வீட்டிலிருந்து வண்ணாங்குளம் சுமார் 500 மீட்டர் தொலைவில் இருக்கிறது. சம்பவம் நடந்த இடத்திற்கும் எங்களது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் எதிரி சுரேஷ், பிரபு ஆகியோர் வெட்டப்பட்ட இடத்திற்கும், எங்களது வீட்டிற்கும் இடையே சுமார் 70 மீட்டர் தொலைவு. எங்களது வீட்டிற்கும், எனது தந்தை, தாயார், தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோர் வெட்டப்பட்ட இடத்திற்கும் இடையே சுமார் 10 மீட்டர் தூரம்.

நாங்கள் திரும்ப வந்துகொண்டிருந்த போது நானும், ராஜலிங்கமும் முன்னாள் வந்துகொண்டிருந்தோம். எங்களுக்கு பின்னால் 3 மீட்டர் தள்ளி மகாலிங்கமும், அதன் பின்னால் சுமார் 4 மீட்டர் தொலைவில் சுரேசும், பிரபுவும் வந்துகொண்டிருந்தார்கள். எதிரிகள் எங்களுக்கு முன்பிருந்து எங்களை நோக்கி ஓடிவந்தார்கள். எதிரிகள் எங்களை கடந்து சென்றுதான் சுரேசையும், பிரபுவையும் வெட்டினார்களா என்றால் சத்தம் கேட்டு நாங்கள் ஓடிவிட்டோம். பிரபுவும், சுரேசும் மாட்டிகொண்டார்கள். சுரேசையும், பிரபுவையும் ஒரே இடத்தில் தான் வெட்டினார்களா என்றால் அவர்கள் இருவரும் பிரிந்து வெவ்வேறு திசைகளில் ஓடினார்கள். வெட்டு வாங்கிகொண்டு தான் ஓடினார்கள்.

சுமார் 10 மீட்டர் இடைவெளிக்குள் இருவருமே விழுந்துவிட்டார்கள். நான் எங்கிருந்து அவர்கள் வெட்டுபட்டதை பார்த்தேன் என்றால் நான் தப்பி ஓடும் போது திரும்பி பார்த்துகொண்டே தான் ஓடினேன். சுரேஷ் மற்றும் பிரபுவின் பிரேதங்கள் ரோட்டின் மேலேயே தான் விழுந்துகிடந்தது. நான் எனது வீட்டை நோக்கி ஓடினேன். சம்பவஇடத்திலிருந்து எனது வீடு மேற்கு திசையில் உள்ளது. ராஜலிங்கமும் வீட்டை நோக்கிதான் ஓடிவந்தார்.

சம்பவம் நடந்தபோது காலை 9.30 மணி. சம்பவம் சுமார் 5 நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டது. சாட்சி மாற்றி சுமார் 10 நிமிடத்திற்குள் முடிந்துவிட்டதாக சொல்லுகிறார். சம்பவஇடத்திலிருந்து மீன்சுருட்டி காவல்நிலையம் 7 கி.மீ

தொலைவில் உள்ளது. புகாரை எனது அண்ணன் ராஜலிங்கம் தான் கொடுத்தார். புகாரை என் அண்ணன் காவல்நிலையத்திற்கு சென்று கொடுத்தாரா அல்லது போலிசார் ஊருக்கு வந்து புகாரை வாங்கிகொண்டார்களா என்றால் போலிசார் ஊருக்கு வந்து புகாரை வாங்கிகொண்டார்கள்.

தேசிங்குபாலன் கொலைவழக்கில் இவ்வழக்கின் எதிரிகளான திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் சாட்சிகளாக இருந்தார்கள் என்றால் சரிதான். பாரதிதாசன் மற்றும் ரவிசந்திரன் தலைமையில் எதிரிகள் அனைவரும் அடிக்கடி ஒன்றுகூடி பேசி தேசிங்குபாலன் இறப்பிற்கு பழிவாங்கவேண்டும் என்று என்றைக்கு எங்குவைத்து பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் பாரதிதாசனின் பூர்வீக வீட்டில்வைத்து வழக்கு சம்பவம் நடைபெற்றதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்து அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த பூர்வீக வீடு எங்களது வீட்டிற்கு எதிர்புறமாக கிழக்கு திசையில் உள்ளது.

அவ்வாறு பேசிகொண்டிருந்தது எனக்கு நேரடியாக தெரியும். மேலும் அலெக்சாண்டர், ரகுபதி, அண்ணி ஜெயந்தி, அம்மா ஜானகி, பெரியம்மா பவுண், ஜெயா, ஜெயாவின் மகன் பாபு, சுபாஷ் ஆகியோர் சொன்னார்கள். அது சம்மந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். அந்த புகாரின் பேரில் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. போலிசார் விசாரணையும் மேற்கொள்ளவில்லை. அப்படி விசாரணை மேற்கொண்டிருந்தால் இச்சம்பவம் நடந்திருக்காது என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

மேற்கண்டவாறு எதிரிகள் திட்டம்தீட்டியது சம்மந்தமாக போலிசார்விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன். யார்யார் திட்டம் தீட்டினார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன். அந்த சங்கதியை எங்களுக்கு தகவல்தெரிவித்த நபர்களின் பெயர்களையும் சொல்லியிருக்கிறேன். எதிரி பாரதிதாசன் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து எங்களது குடும்பத்தினரை கொலைசெய்வதற்காக திட்டம் தீட்டினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், வழக்கிற்கும் 13 ஆம் எதிரிக்கும் சம்மந்தம்கிடையாது என்றாலும், 13 ஆம் எதிரி 2 ஆம் எதிரியின்

சகோதரர் என்பதால் அவர்மீது பொய்யான புகார் கொடுத்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல.

சம்பவத்தினதன்று நான் சம்பவஇடத்திலேயே இல்லை என்றாலும் வழக்கு சம்பவத்தை நான் பார்த்ததாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவஇடத்தில் இருந்தும் எதிரிகள் என் சகோதரர்கள் மற்றும் பெற்றோர்களை வெட்டியதை தடுப்பதற்கு நான் முயற்சி செய்யவில்லையா என்றால் யாராவது ஒருவராவது தப்பித்துவிடுங்கள் என்று என் அம்மா சொன்னதால் நானும், ராஜலிங்கமும் தப்பித்து ஓடிவிட்டோம்.

நாங்கள் தப்பித்து மேற்குபக்கமாக ஓடினோம். எங்களை நோக்கி கிழக்கிலிருந்து மேற்காக என் பெற்றோர்களும், தர்மலிங்கமும் பதற்றத்தில் வந்தார்கள். எதிரிகள் ஆயுதங்களுடன் எங்களுக்கு பின்புறமாக இருந்து ஓடிவந்தார்கள். நாங்கள் ஓடிவந்த இடத்திற்கும் என் பெற்றோர் இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 மீட்டர் தொலைவு இருக்கும். எதிரிகள் எங்களை தாண்டிசென்று என் பெற்றோர்களை வெட்டினார்களா என்றால் நாங்கள் ஓடிசென்று எங்கள் பெற்றோரை கடந்து ஓடிவிட்டோம். அதன்பின்னர் என் பெற்றோர்களும், தர்மலிங்கமும் எதிரிகளை பார்த்து வெட்டாதீங்க என்று சொல்லி மறித்தார்கள்.

அப்போது தான் எதிரிகள் என் பெற்றோர்களையும், தர்மலிங்கத்தையும் வெட்டினார்கள். அதனை நான் 15 மீட்டர் துாரத்திலிருந்து பார்த்தேன். நான் சம்பவதினத்தன்று சம்பவஇடத்திலேயே இல்லை என்றாலும் அதனால் தான் பொய்யான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி பாரதிதாசனுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் அவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல.

**3 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் மேற்கண்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**எதிரிகள் 2, 7, 11, 14 முதல் 17 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பி.சத்தியமூர்த்தி ஆஜர். இன்று வக்காலத்து தாக்கல் செய்திருக்கிறார்.**

**குறுக்கு விசாரணையை நிறுத்திவைக்க கோரி மனுதாக்கல் செய்து அது நிராகரிக்கப்பட்டது.**

**எதிரிகள் 1, 5, 9 மற்றும் 18 தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.